RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2423

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

# பெரியபுராணம் காட்டும் விருந்தோம்பல்

ம. அனுராதா [அ *]

[அ] தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-52, இந்தியா

# Hospitality shown by Periyapuranam

M. Anuradha [a, *]

[a] Department of Tamil, Nandha Arts and science college, Erode-52, India.
*Corresponding author Email: anutamil71@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2422
Received: 13-02-2024; Revised: 05-05-2024; Accepted: 16-05-2024; Published: 21-05-2024

**Abstract:** Human life is of high purpose. Intended goal. Human life is not a life made up of organs. Emotions are also a life of morality. High civilization and culture must prevail in human life. Human life is complete in evidence. The goal of testimony is pure love, which gives that pleasure. Therefore, life is about living by activities in such a way that the body, soul and consciousness are all benefited. In that sense, life is a collection of people's values. It identifies the identity of an individual by how he operates in the public sphere and how he acts in the social sphere. Religion explains the spiritual relationship between man and God. Religion is the spiritual art of cultivating man into a divine being. There are many names of religion, but the goal is the same. Similarly, though there are many principles, God is the only God in the form of grace, power and knowledge. That is why the proverb that without Him not an atom moves clearly proves this fact.

**Keywords:** Periyapuranam, Hospitality, Traditions, Human life, Religion

## முன்னுரை

மனித வாழ்க்கை உயர்ந்த நோக்கமுடையது. திட்டமிடப்பட்ட குறிக்கோளுடையது. உறுப்புக்களால் ஆன வாழ்க்கையன்று மனித வாழ்க்கை. உணர்வுகளும் ஒழுக்க நெறிகளால் அமைந்த வாழ்க்கையாகும். மானுட வாழ்க்கையில் உயர்ந்த நாகரிகமும் பண்பாடும் நிலைபெற்று இருக்கவேண்டும். மனித வாழ்க்கை முழுமை அடைவது சான்றான்மையிலே ஆகும். சான்றான்மையின் இலக்கே தூய அன்பு அவ்வன்பு இன்பத்தை நல்குவதாகும். எனவே உடல், உயிர், உணர்வு ஆகிய அனைத்திற்கும் நற்பயன்கள் கிடைக்குமாறு செயல்கள்செய்து வாழ்வதே வாழ்க்கையாகும்.

அந்த வகையில் மக்களுடைய விழுமிய கருத்துக்களின் தொகுப்புதான் வாழ்வியல். இதில் தனிமனிதன் பொதுத்தளத்தில் எப்படி இயங்குகின்றான், சமூக தளத்தில் அவனுடைய செயல்பாடுகள் எவ்விதம் எனக் கொண்டே தனிமனித வாழ்வியல் அடையாளத்தை அடையாளப்படுத்துகின்றது.

மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள ஆன்மீக உறவை விளக்குவது சமயம். மனிதனை தெய்வீக பண்புள்ள சான்றோனாக பக்குவப்படுத்தும் ஆன்மீகக் கலைக்குச் சமயம் என்று பெயர். சமயம் வழி பெயர்கள் பல வாயினும் குறிக்கோள் ஒன்றே. அதேபோல நெறிகள் பலவாயினும் அருள், ஆற்றல், அறிவு முதலிய வடிவங்களில் கடவுள் இறைவன் ஒருவனே என்பதே பேருண்மை. அதனாலேயே, அவனின்றி ஓரணுவும் அசையாது என்னும் பழமொழி இந்த உண்மையை தெளிவாக மெய்ப்பிக்கிறது.

சமயம் என்பது கல்வியின் ஒரு பகுதியன்று. அது வாழ்க்கையின் அடிப்படையான நெறி. சமயமும் வாழ்க்கையும் இணைந்து செல்லுதல் வேண்டும். இச்செல்வழியே உன்னத வாழ்க்கைக்கு வழியாக அமையும். இதனை மெய்ப்பித்துக் காட்டியவர்களே நம் சமயப் பெரியோர்கள். அதனாலேயே,

“யான் எனது என்னும் செருக்கெருப்பான் வானோர்க்கு

உயர்ந்த உலகம் புகும்”

என்று குறள் பாடுகிறது (Parimelalhagar, 2017). உண்மை என்ற சொல்லிற்கு ஆழ்ந்து நோக்குமிடத்து ஒரே உண்மைதான் இருக்கும். அவ்வுண்மை மாறாத உண்மை, நிலைத்த உண்மை, எங்கும் நிலை பெறுகின்ற பேருண்மை, முக்காலத்திற்கும் பொருந்துகின்ற முழு உண்மை, அதுவே உலகப் பொது உண்மை. (யுனிவர்சல் ட்ரூத்) சத்தியம் வெல்லும் என்பது மெய்ஞான உண்மை. உலகம் உருண்டை வடிவம் என்பது விஞ்ஞான உண்மை. இவ் உண்மைக்கு மாறாக உலகில் வேறொன்றும் இல்லை. சுருங்கக் கூறுமிடத்து மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாக இருப்பதே உண்மை எனப்படும். இவ்வுண்மையை மெய்ப்பித்து வென்று வாழ்வாங்கு இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களே நம் மூதாதையர்களும், அடியார் பெருமக்களும், புலவர் பெருமக்களும், நன்மனம் கொண்ட வேந்தர்களும். இவ்வாறாக இவர்கள் வாழ்ந்து காட்டிய மெய்ஞானநெறி வாழ்வியலே நமக்குப் பனுவல்களாக கிடைக்கப் பெற்றுள்ளன. சான்றாக,

”பதியிழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த

நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்

கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றார்

மதியிழந்துதன் வாயிழந்து தருந்தவன் மறைந்தான்”

என்ற இப்பாடல் சொன்ன சொல்லை மறைக்காமல், மறக்காமல், மறுக்காமல் காப்பாற்றிய உண்மை நெறியை மிகத் தெளிவாக இனிது உணர்த்துகின்றது (Aasukavirajar, 1913). மிகத் தெளிவாக வள்ளுவரும் இக்கருத்தை,

”புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை

வாய்மை யாற் காணப்படும்”

என்று இயம்புகின்றது (Parimelalhagar, 2017).

எனவே,

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்”

என்ற வள்ளுவரின் குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்கள் நமது நாயன்மார் பெருந்தகைகள். அவர்களின் வழி விருந்தோம்பலை எடுத்தியம்புவதாக அமைவதே இக்கட்டுரைச் சாரம் (Parimelalhagar, 2017).

## விருந்தோம்பல்

விருந்தை எதிர்பார்ப்பவர் ஒருபோதும் வறுமைக்கு ஆட்பட மாட்டார். வேள்வியை காட்டிலும் சிறந்த விருந்தோம்பலே மேன்மையானது. இதனை,

“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல் விருந்து வானத்தவர்க்கு“

என்று பேசுகிறது குறள். மண்ணுலகில் சிறப்புற விருந்தோம்பியவர்கள் இறைவனால் விருந்தோம்ப பெறுவர் என்ற மாண்பினை தமிழர்கள் தலைமேற் கொண்டனர் (Parimelalhagar, 2017). இப்பண்பினை பாரதிதாசன்,

"இட்டுப்பார் உண்டவர்கள்

இன்புற்று இருக்கையிலே

தொட்டுப்பார் உன் நெஞ்சைத்

தோன்றும் இன்பம் - கட்டிக்

கரும்பென்பார் பெண்ணைக்

கவிஞர் எலாம் தந்த

விருந்தோம்பும் மேன்மையினால்

அன்றோ? தெரிந்ததா?"

என்று பெண்களுக்கு உள்ள பெருமைகளில் முதன்மையானது விருந்தோம்பல் பண்பே என்று தெளிவுபடுத்தி உள்ளார் (Bharathidhasan, 2000).

## இளையான்குடி மாற நாயனார்

நீர்வளம் மிக்க நிலங்கள் சூழ்ந்த செம்மை நலம் கொண்டது இளையான்குடி. இத்திருப்பதியில் மாதவப் பயனாய் தோன்றியவர் மாறனார் என்ற இளையான்குடி மாற நாயனார். இவர் அம்பலத்தில் ஆடுவார் அடிமலரை தன் முடி மீது சூடுவார். எப்போதும் எம்பிரானுடைய அடிமைத்திறம் பூண்ட சால்பு மிக்கவர். சிவபெருமானுடைய அடியார்களிடம் மிகுந்த அன்பு கொண்ட மாறனார் உழவுத் தொழிலால் மிகுந்த செல்வ வளம் கொண்டவர்.

"செல்வத்துப் பயனே ஈதல்" என புறநானூறு உரைப்பதைப் போல செல்வத்தின் பயன் அடியார்க்கு அமுதளித்தலே எனத்தெளிந்தவர். என் பணி இறைவனுக்கே என்று கூறி பணி செய்யும் அடியார்கள் யாராயினும் எதிர்கொண்டு கைகூப்பித் தொழுவார். அன்புடை சொற்களால் அழைத்து வந்து சிறப்பாசனம் அமர்த்தி அறுசுவை விருந்து அளித்து மகிழ்வார்.

"கொண்டு வந்து மனை புகுந்து குலாவுபாதம் விளக்கியே

மண்டு காதலினால் அதனிடை வைத்த அருச்சனை செய்தபின்

உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத்திறத்தினிதில் ஒப்பிலா

அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி னமுது செய்ய வளித்துள்ளார்". (Kirupanandha Variyar, 2009)

அடியார் உள்ளம் உவந்து வாழ்த்துவதினால் மாறனார்க்கு இருநிதிகளும் பல்கி பெருகின. குபேரனை போல வாழ்ந்த அவர் மிகுதியான தான தர்மங்கள் செய்தார். எளிமையான இச்செயலை வறுமையுறும்போது மனமுவந்து செய்தல் அரிது இப்படியார் வறுமையுற்றபோதும் இத்திருத்தொண்டில் வல்லவர் என்பதனை உலகிற்கு உணர்த்த திருவுள்ளம் கொண்டார் கண்ணுதல் கடவுளார்.

வளம் சுருங்கிய காலத்திலும் மாறனார் தான் செய்து வந்த மகேஸ்வர வழிபாட்டினை குறைக்கவில்லை. நில புலன்களை விற்று தன் பணியை அயராது செய்து வந்தார். அவருடைய அறத்திற்கும் அணு அளவும் குறையாத மாறுபாடு இன்றி அவருடைய வாழ்க்கைத் துணையாக அமைந்த அம்மையும் ஒழுகுவார்.

மழைக்காலம் எங்கும் வெள்ளநீர், பள்ளங்கள்தோறும் வெள்ளநீரானது நிறைந்துள்ளது. அவ்வமயம் மாறனாரும் மனைவியும் பட்டினியால் வருந்தி கதவடைத்து உறக்கமின்றி ஐந்தெழுத்து ஓதிய வண்ணம் இருந்தனர். நடுநிசி நேரம் அம்மையும் அப்பனும் நீரும் கண்டகையும் அணிந்து தவவேடம் கொண்டு பசித்து வந்தோம் என மாறனார் வீட்டு கதவை தட்டினர். உடனே மாறனார் கதவைத் திறந்து வந்திருக்கும் அடியவரை இன்முகத்துடன் வரவேற்று, மனைவியுடன் திருவடியில் விழுந்து வணங்கினார். அச்சமயம் வீட்டில் விருந்துக்குரிய சாதனங்கள் ஏதுமில்லை. இருப்பினும் பசித்து வந்தவருக்கு உணவிடல் எங்ஙனம் என மனைவியிடம் வினாவினார்.

“நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்

இமக்குல கொடி பாகர்கினியவர்

தமக்கு நாமின் னடிசில் தகவுற

அமைக்குமாறு எங்ஙனே அணங்கேயென”

அன்பும் பண்பும் ஒருங்கிணைந்த அம்மையார், வேறு வழி ஒன்றுமில்லை (Kirupanandha Variyar, 2009). ஏனெனில் இனி கடன் கொடுப்பார் இல்லை. அதோடு நேரமும் நடுநிசியுடன் கூடிய மழைக்காலம். பசித்து வந்த அடியாருக்கு அன்னம் அளித்தலை காட்டிலும் வேறு தன்மை இல்லை. இருப்பினும் ஒரு வழி உள்ளது என,

“செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்

மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்

வல்ல வாறமு தாக்கலும் மாகுமற்

றல்ல தொன்று அறியேன் என்றயர்வுற”

நமது துன்பம் நீங்குமாறு இன்று பகலில் வயலில் விதைத்த நெல்லை வாரிக் கொண்டு வந்தால் அடியேன் முயன்றவாறு அமுது செயலாகும் எனக் கூறினார் (Kirupanandha Variyar, 2009). இதனைக் கேட்டு நாயனார் மிக்க மகிழ்ந்து இரவையும் பாராமல் மழை வெள்ளத்தில் நனைந்தவாரே மின்னல் வெளிச்சமுடன் தம் வயலை நோக்கி பயணப்பட்டார். இடர்பாட்டிற்கு இடையில் மழைநீர் வழிய நெல்லை கூடையில் போட்டுக் கொண்டு வந்தார். அதனை வாங்கிய அம்மையார் பலமுறை நீரால் கழுவி நெல்லை பக்குவப்படுத்தினார். ஆனால் கரியமுது செய்ய விறகில்லையே எனக் கூறிய போது தனது வீட்டின் ஒருபுறத்தே இருந்த கட்டைகளை பிய்த்துக் கொடுத்தார். அதனைக் கொண்டு தீமூட்டி பக்குவமாக அன்னமாக்கினார். ஆக்கிய பின் அத்திருவாட்டி மாறனாரை நோக்கி இனி கறிக்கு என் செய்வோம் எனத் தொழுதார்.

“வழிவரும் இளைப்பினோடும் வருத்திய பசியினாலே

அழிவுறு மையன் என்னும் அன்பினிற் பொலிந்து சென்று

குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்

பழி முதல் பறிப்பார் போலப் பறித்தவைகறிக்கு நல்க”

நாயனார் விரைந்து சென்று தமது கொல்லையிலே குழிக்கு மேல் வளர்ந்திடாத இலைக்கறி பயிர்களை கையினாலே தடவி வேருடன் பறித்தார் (Kirupanandha Variyar, 2009). பறித்த கீரையை அம்மையாரிடம் வழங்கினார். அதனைச் சுத்தம் செய்து புனித பாத்திரத்தில் இட்டு தனது கைத்திறத்தால் பல்வகை அமுது செய்தார். இனி தாமதியாமல் ஈசனடியாரை அமுது செய்விப்போம் என்று,

“அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்

எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுதுசெய்தருள்க என்று

தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்

செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்றார்”

“அடியேன் துன்பத்தைப் போக்க வந்த பெரியோரே! இங்கு அமுது செய்ய எழுந்தருளும்” என்று அழைத்தார். ஆதியும் அந்தமில்லாத எம்பெருமான் சோதியாய் எழுந்து தோன்றினார். அது கண்டு நாயனாரும் நாயகியாரும் திகைத்து நின்றனர். மாலயன் காணாத மாமணிச் சோதியன் உமையம்மையாருடன் இடபவாகனமீது காட்சியளித்தார் (Kirupanandha Variyar, 2009).

சிவபெருமான் திருத்தொண்டரைக் கருணையுடன் நோக்கி அன்பனே அன்பர் பூஜை செய்த நீ நின் மனைவியுடன் நமது சிவலோகமெய்தி எல்லை இல்லாத இன்பத்தை நுகர்ந்து இருப்பாயாக என்று திருவருள் புரிந்தார்.

இறைவன் வழிபாடு எல்லாவற்றிலும் சிறந்தது. அதனை காட்டிலும் சிறந்தது அடியார் வழிபாடு. திருக்கோயிலில் இறைவனுக்குச் செய்யும் வழிபாடு அடியவரை சேராது. ஆனால் அடியாருக்கு செய்த வழிபாடு இறைவனை சாரும்.

"படமாடக் கோயில் பகவற்கொன் றீயின்

நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா

நடமாடக் கோயில் நம்பர் கொன் றீயீன்

படமாடக் கோயில் பகவற்க தாமே"

என்று திருமந்திரம் போற்றுகின்றது (Thirumoolar, 2017). அடியார் பெருமையை முறைப்பட வேள்விகள் புரியும் அந்தணர்கள் கோடி பேர்களுக்கு உணவு தந்த புண்ணியம் தொண்டருக்கு ஒரு பிடி அண்ணன் தருவதால் உண்டாகுமே என்ற சிறப்பினை,

"ஆறிடு வேள்வி அருமறை நூலவர்

கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதில்

நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலே

பேறெனில் ஓர்பிடி பேறதுவாமே"

என்று திருமந்திரம் கூறுவதிலிருந்து அடியவர் பூசையின் பெருமையை உணரலாம் (Kirupanandha Variyar, 2009). உலகினில் மனிதராகப் பிறப்பெடுத்ததன் பயன் அடியார்க்கு அமுது செய்வித்தலே என்பதனை தம் வாழ்வாகக் கொண்டு வாழ்ந்தவர் இளையான்குடி மாற நாயனார் எனவே மெய்யன்போடு விருந்துஉபசாரம் செய்தலே செல்வங்களில் எல்லாம் மேலான செல்வம் என்பதை நாம் அறியலாம்.

## சிறு தொண்ட நாயனார்

"செங்காட்டங்குடி மேய சிறுதொண்டருக்கு அடியேன்"

சிறுதொண்ட நாயனார் சைவ சமய பெருமக்களால் பெரிதும் மதிக்கப்படக்கூடியவர். நாயன்மார்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

"உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்

தெள்ளிவடித் தறிந்த பொருள் சிவன் கழலிற் செறிவென்றே

கொள்ளுமுனர் வினின்முன்னே கூற்றுதைத்த

பள்ளமடை யாய்என்றும் பயின்றுவரும் பண்புடையார்"

இவர் இரண்டாம் புலிகேசியை வெற்றி கொண்ட சேனாதிபதியாக நரசிம்ம பல்லவரிடம் பணியாற்றியவர் (Kirupanandha Variyar, 2009). காவிரி வளநாட்டில் திருச்செங்காட்டங்குடியில் அவதரித்தவர். பரஞ்சோதியார் என்று நாமம் கொண்ட நாயனார். மருத்துவம், வடநூற்கலை, படைக்கலத் தொழில், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் ஆகியவற்றில் வல்லவராகத் திகழ்ந்தவர். நிறைந்த கலைகளையுடையவர் என்ற போதிலும் சிவன் கழலைச் சிந்தித்தலே மெய் வாழ்வு என்பதனை உணர்ந்தவர்.

சிறுதொண்டர் எனும் பெயர்

"சீதமதி யாவினுடன் செஞ்சடைமேல் செறிவித்த

நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்

மேதகையார் அவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்

ஆதலினால் சிறுதொண்டர் எனநிகழ்ந்தார் அவனியின்மேல்"

குளிர் சந்திரனையும், வெப்பமிகு பாம்பினையும் ஒருங்கே கூடி சூடிய சிவபெருமானின் அடியவர்களை அன்பின் மிகுதியால் அவர்கள் முன்பு பரஞ்சோதி யார் அடக்கமாக உடம்பை வணங்கி செல்லுவார் (Kirupanandha Variyar, 2009). இதனாலேயே சிறுத்தொண்டர் என்று உலகத்தார் உரைத்தனர்.

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்ற மணிமேகலை கூற்றினைப் போல அளவில்லாத அடியவர்களுக்கு அமுது செய்து அகம் மகிழ்ச்சியுடன் வாழ்பவராவார் (Swaminatha Iyer, 1996).

இந்நிலையில் பெருமானுடைய திருவருளால் நாயனாருக்கு நாளும் கோளும் நன்மை பயத்த திருநாளில் சீராளத்தேவர் என்ற திருமைந்தர் பிறந்தார். பிள்ளை பிறந்ததை முன்னிட்டு சுற்றத்தார்க்கும் மற்றோர்க்கும் பெரும் செல்வமும் அணிகலன்களும் வழங்கி மகிழ்ந்தார், அந்நாளில் புகலியில் வந்து அவதரித்த திருஞானசம்பந்தர் தமது தொண்டர்களுடன் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தார். அவரை எதிர்கொண்டு அழைத்து தம் மாளிகையிலிருத்தி அவருக்கு திருவடி பூஜை செய்தார். அதோடு உடன் வந்து அடியார்களுக்கும் உபச்சாரம் செய்து அமுதளித்து மகிழ்ந்தார். இதனால் மகிழ்ந்த திருஞானசம்பந்த பெருமான் நாயனாரின் தொண்டினை பாராட்டி,

"பைங்கோட்டு மலர்ப் புன்னை பறவைகாள் பயப்பூர

சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே

செங்காட்டங் குடிமேய சிறுதொண்டன் பணிசெய்ய

வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே"

என்று பாடியருளினார் (Kirupanandha Variyar, 2009). இவ்வாறு சிறு தொண்ட நாயனார் நாளும் அன்புடன் அடியவர்கள் திருக்கூட்டத்திற்கு அமுதளிக்கும் சிறப்பினை உலகறியச் செய்ய திருக்கைலாயநாதர் திரு உள்ளம் கொண்டார். அங்கஙனம் திருவுள்ளம் கொண்ட பெருமாள் வைரவ சன்னியாச வடிவம் கொண்டு எழுந்தருளினார்.

திருவடிகளில் மணி சிலம்பு ஒலிக்க, திருமார்பில் திரிசூலமும் வலத்திருக்கையில் தமருகமும் கொண்டு, பிறைசூடி, சங்கு மாலையும் தோல் வளையல்களும் கூடிய திருக்கோலம் கொண்டு திருச்செங்காட்டங்குடியை அடைந்தார். நாள்தோறும் எண்ணற்ற அடியார்கள் அமுதுண்டு செல்லும் மனையில் அன்று ஒருவரும் வந்திராத நிலையில் அது கண்டு வருந்திய நாயனார் அடியவரை அழைத்து வர வெளியிலே சென்று விட்டார். அவ்வமையம் நம்பெருமான் தொண்டர் மனை அடைந்தார். சிறு தொண்டர் உள்ளே இருக்கின்றாரா என வந்தவர் வினவ வேலைக்காரம்மை முன்வந்து வைரவர் திருவடி தொழுது, நாயனார் சென்ற காரணத்தை கூறினார். அது கேட்ட வைரவர், அம்மா பெண்கள் தனித்து இருக்கின்ற மனையில் யாம் வரமாட்டோம் என்று கூறினார். அது கேட்டு அம்மையவர்கள் அஞ்சி அடிகளே சிவபிரான் அடியார்கள் ஒருவரும் இன்று வராமையினால் நாயனார் தேடிக்கொண்டு சென்று உள்ளார். தாமதிக்க மாட்டார் எழுந்தருளிவீராக என இறைஞ்சினார். சிறுதொண்டர் அடியவரை தேடித்தேடி அலைந்து சோர்வுற்று வருந்தினார். யாம் செய்த வினை என்னவோ என மிக்க வருந்தி மனை வந்தடைந்தார். கணவனாரை கண்ட அம்மை, வைரவர் வந்து சென்றதைக் கூறி அவர் கணபதீச்சுரம் கோயிலின் ஆத்தி மரத்தின் கீழே அமர்ந்திருப்பதைக் கூறினார். கண்ணுதலில் காட்டாதார் கணபதீச்சரத்தின் கண்

"வண்ணமலர் ஆத்தியின் கீழ் இருக்கின்றோம்

மற்று அவர்தாம் நண்ணினால் நாம் இருந்த பரிசு

உரைப்பீர் என்றருளி அண்ணலார் திருவாத்தி

அணைந்தருளி அமர்ந்திருந்தார்"

"அடியேன் உய்ந்தேன்" என மிக விறுப்புடன் மிக விரைந்து திருக்கோயிலை அடைந்து வைரவரை கண்டு தொழுது வணங்கி நின்றார் (Kirupanandha Variyar, 2009). நின்றவரை கண்ட பெருமான் சிறுதொண்டர் என்பவர் நீர்தானோ என வினாவினார். அதற்கு நாயனார் எம்மை ஆளவந்த எந்தையே அடியேன் செய்த தவத்தினால் தங்களைக் கண்டேன். இனியும் தாமதிக்காமல் மனைவந்து அமுதுண்ண வருவீராக என வேண்டினார். அப்போது வைரவர் பசித்து வந்த எமக்கு உன்னால் அமுதிட முடியாது எனக் கூறினார்.

அதற்கு சிறுத்தொண்டர் தங்களின் அமுது செய்யும் தன்மையை கூறின் முடியாதது ஏதும் இல்லை ஏற்பாடு செய்கிறேன் என்றார். ஆனால் வைரவரோ யாம் ஆறு மாதத்திற்கு ஒருமுறை பசுவதைத்து உண்போம். அதற்குரிய நாள் இன்று என்று கூறினார். உடனே சிறுத்தொண்டர் பெருமானே என்னிடத்தில் மூன்று வகையான பசு உண்டு, இன்னது எதுவென அருளிச்செய்யும் காலந்தாழ்த்தாமல் அமுது தயாரித்து விரைவில் வருவேன் என்றார். ஆனால் வைரவரோ நாம் உண்பது நரப்பசுவாகும். அதுவும் அங்க பழுதில்லாமல் ஐந்து வயதிற்குள் ஒரு குடிக்கு ஒரு மகனாக இருக்க வேண்டும் என்றார். அதோடு இல்லாமல் தாயார் மடியில் வைத்து பிடிக்கும் பொழுது தந்தை மகிழ்ச்சியுடன் அறிந்து பக்குவமாக கறி சமைக்க வேண்டும் என்றதோடு அச்சமயம் மூவரும் நிறைமானதோடு இருக்க வேண்டும் என்றார். கேட்ட சிறுதொண்டர் மனை விரைந்து வைரவர் கேட்டதைக் கூறினார். கேட்ட அம்மையார் சிவனடியாருக்கு அமுது செய்யும் கணவனார் மணமகிழ்வே பேறென நினைந்து செய்ய வேண்டியதைக் கூறக் கேட்டார். அதற்கு பள்ளிபயிலும் நம் மகவே சாத்தியம் என்றார். கணவனாரின் திறத்திற்கு மாறாத தன்மையுடையவரான அம்மை, மனமுவந்து ஏற்று செல்வ மகனை பள்ளியில் இருந்து அழைத்து வர உடன்பட்டார்.

"காதல் மனையார் தாம்கூறக் கணவனாறும் காதலனை

ஏதம் அகலப்பெற்ற பேறுஎல்லாம் எய்தினார் போல

நாதர் தமக்கு அங்கு அமுது ஆக்க நறுமென் குதலைமொழிப் புதல்வன்

ஓத அணைந்த பள்ளியினில் உடன் கொண்டு எய்தக் கடிது அகன்றார்"

பள்ளியிலிருந்து அழைத்து வந்த மகனை அழகுபடுத்தி கணவனார் கையில் கொடுத்தார் (Kirupanandha Variyar, 2009). மண்ணிற்கு இரையாகும் ஊன் உடம்பு அடியவருக்கு பயன்படுகிறது என்று இருவரும் மகிழ்ந்தனர். இதற்காகவே இத்தவப்புதல்வனை யாம் பெற்றோம் என மகிழ்ந்திருக்கையில் மகனும் மகிழ்வது கண்டு அகமும் முகமும் மலர்ந்து அறிய செயலான வாள் கொண்டு தலையை அறிந்தார். அறிந்த தலை விருந்திற்கு ஆகாதென வேலையாளிடம் மண்ணில் புதைத்து வர செய்தார். பின் உடம்பைக் கொண்டு விருந்தை தயாரித்தனர். பின் தீப தூபம் காட்டி நறுமணங்களால் இல்லத்தினை அழகாக செய்து அடியவரை விருந்துக்கு அழைத்தனர். இலையிட்டு அன்னமும் இறைச்சியும் பரிமாறினர். தலைக்கறி மட்டும் அமுதிற்கு ஆகாதென அதை விட்டு மற்றவற்றால் கறிசமைத்தோம் என்றனர். அதுவும் கூட நாம் உண்போம் ஆகவே அதனையும் படையுங்கள் என்றார் வைரவர். இதனைக் கேட்ட சிறு தொண்டரோ அஞ்சி நடுங்கினார். அந்த வேளையில் தாதியார் வைரவர் கேட்பாரே என்றெண்ணி தலையையும் சமைத்து வைத்துள்ளோம் என்றார். அதனையும் பரிமாறி அமுது உண்ண வேண்டும் போது யாம் தனியே உண்ண மாட்டோம் நீர் அணிந்த அடியவர் ஒருவரை அழைத்து வாரும் என்றார். ஊர் முழுக்கத் தேடியும் அடியரைக் காணவில்லை. அதற்கு வைரவர் நல்லது நீரே என்னுடன் அமர்க எனப் பணித்து, தனக்கிட்ட அமுதினையே அவருக்கும் இட ஆணையிட்டார். பிறகு,

"ஆறுதிங்கள் ஒழிந்துண்போம் உண்ணுமளவு தெரியாது

சோறும் நாளும் உண்பீர்முன் உண்ப தென்நம் முடன்துய்ப்ப

மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னை அழையும்

ஈறும் முதலும் இல்லாதார்க் கிப்போ துதவான் அவன் என்றார்"

ஆறு மாதங்களுக்கு ஒரு முறை யாம் உணவு உண்போம். எனவே நம்முடன் உணவு செய்ய மைந்தனை அழையும் என்றார் (Kirupanandha Variyar, 2009). அவன் இங்கு இப்போது உதவான் என்றார்.

எதற்காக இப்படி கூறுகின்றீர் இப்போது உதவுவான் எப்போதும் உதவுவான் எனவே நீர் அலையும் என்றார். சிறு தொண்டரும்,

"எந்தாய் வருக இடர்தீர்க்க இங்கு வருக எமதுகுல

மைந்தா! வருக மாணிக்க மணியே வருக மாதவத்தால்"

என ஓலமிட பரமேஸ்வரன் திருவருளால் பள்ளியிலிருந்து ஓடி வருகின்றார் போல் ஓடிவந்த மகனை அன்புடன் ஆரத் தழுவி அம்மை கணவனாரிடம் தந்தார் (Kirupanandha Variyar, 2009). பிறகு மகனை எடுத்துக் கொண்டு அடியவரை அமுது செய்ய உள்ளே வரும்பொழுது வைரவராக வந்தவர் மறைந்தருளினார். வைரவரைக் காணாத சிறுதொண்டர் கீழே விழுந்தார். இலையில் இறைச்சியும் காணவில்லை. அப்போது விடையூர்தியுடன் வானிடைக் காட்சியளித்தார் இறைவனார். இனிய கறியும் அமுதும் படைத்த சிறு தொண்டருக்கு கருணை புரிந்தார்.

"அன்பின் வென்ற தொண்டரவர்க் கமைந்த மனைவியார் மைந்தர்

முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங் கண்டு பரவசமாய்

என்பும் மனமும் கரைந்துருக விழுந்தார் எழுந்தார் ஏத்தினார்

பின்பு பரமர் தகுதியினால் பெரியோ ரவருக் கருள்புரிந்தார்"

அன்பினால் பாசத்தை வென்ற சிறு தொண்டரும் மனைவியாரும் சீராளத்தேவருமான மகனும் தமக்கு முன்னே தோன்றிய சிவமூர்த்தியை முழுதும் கண்டு உள்ளமும் உயிரும் உருக மண்மிசை வீழ்ந்து வணங்கினார் (Kirupanandha Variyar, 2009). தவம் கிடந்தாலும் காண முடியாத அரும்பெரும் சோதியே எங்கள் தெய்வமே எனக் கொண்டாடினர். பெருமானும், நாயனார், மனைவியார், மகனார், பணிப்பெண் என நால்வருக்கும் அருள் செய்து எப்பொழுதும் வேல்முருகன் திருவடிக்கீழ் பிரியாது இன்புற்று இருக்குமாறு சிவலோகத்திற்கு இறைவர் உடன் அழைத்துச் சென்றார். "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்"

என்பது ஔவையின் வாக்கு. கிடைத்தற்குரிய அமிர்தமே கிடைத்தாலும் பிறருக்கு பகிர்ந்து உண்பதே நல்ல பண்பாகும். அதைப் போலவே பெருமானும் சிறுதொண்டர் அன்பின் திறத்தை உலகறியச் செய்யவே தம்முடன் பணித்தார். விருந்தோம்பலில் விருந்தினர் முகம் வாடக்கூடாது என்பதை வள்ளுவரும்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்தரிந்து

நோக்க குழையும் விருந்து"

என்று உரைத்ததைப் போல சிறுதொண்டரும் வைரவரின் முகம் வாடிடக்கூடாது என்பதில் தன்னிகரற்று விளங்கினார் (Parimelalhagar, 2017). இப்பெரும் புண்ணியத்தை பெற்ற சிறு தொண்டரின் அன்பிற்கு,

"இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்

உகந்து அருள் செய்திடும் உத்தமநாதனை

கொழுந்தன்பு செய்து அருள்கூர வல்லார்க்கு

மகிழ்ந்தன்பு செய்யும் அருள் அதுவாகும்"

என்ற திருமந்திர பாடல் வழி நாமும் நின்று இறைவன் அருளைப் பெறுவோமாக (Thirumoolar, 2017).

## முடிவுரை

தன் சுற்றத்தினர் மட்டுமல்லாது நாடிவரும் எவருக்கும் தாராளமானதுடன் கவனிப்பையும் காருண்யத்தையும் கொடுப்பதே விருந்து எனப்படும். விருந்து என்பது அண்ணமிடல் மட்டுமல்லாது தம் ஆன்மாவை தான் விரும்பும் இறைவனுக்காக சமர்ப்பிப்பது என்பது ஆகும். இவ்வகையில் இரு

நாயன்மார்களின் வாழ்வியலும் நமக்கெல்லாம் ஒரு தெளிவுணர்த்தலே. சிவஞான சித்தியார் சூத்திரம் வழி, எல்லாம் ஏற்பவன் சிவனேயாதலின் அவனடிக்கு அன்பு செய்து வழிபடுவதே அறம் செய்யத்தக்கதாகும் என்று நிலையை தலைமேற் கொண்டு உய்வோமாக.

## References


Aasukavirajar (1913) Arisanthira Puranam, Thaniyambal Vilasa achagam, Nagapattinam, India

Bharathidhasan, (2000) Kudumba Vikakku, Narmadha Pathipagam, Chennai, India

Kirupanandha Variyar, (2009) Periyapuranam, Guhashri Vaariyar Pathippagam, Chennai, India

Parimelalhagar, (2017) Thirukural, J.K.R. Publications, Sivaganga, India

Swaminatha Iyer, U.V. (1996) Manimekalai, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Thirumoolar (2017) Thirumoolar Aruliya Deivatamil Thirumanthiram Moolamum Uraiyum, Dharma Sastha Arakattalai Veliyedu, Seerkali, India


## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

M. Anuradha, Hospitality shown by Periyapuranam, Indian Journal of Tamil, 5(2), (2024) 17-25. https://doi.org/10.54392/ijot2423